# தமிழ் இலக்கியங்களில்
## சமயமும் சமூகமும்

தொகுதி – II




பதிப்பாசிரியர்கள்

முனைவர் க. முருகேசன்
முனைவர் மா. சிதம்பரம்
முனைவர் சு. குமரன்
முனைவர் சு. இராமலிங்கம்
திரு. கி. பொன்னுதுரை

# தமிழ் இலக்கியங்களில் சமயமும் சமூகமும்

**(பன்னாட்டு ஆய்வுக் கருத்தரங்கம்)**


| | | |
|---|---|---|
| பதிப்பாசிரியர்கள் | : | **முனைவர் க. முருகேசன்**<br>**முனைவர் மா. சிதம்பரம்**<br>**முனைவர் சு. குமரன்**<br>**முனைவர் சு. இராமலிங்கம்**<br>**திரு. கி. பொன்னுதுரை** |
| பதிப்புரிமை | : | பதிப்பாசிரியர்கள் |
| முதற்பதிப்பு | : | நவம்பர், 2018 |
| வெளியீடு | : | **தமிழ்த்துறை**<br>**கொங்குநாடு கலை அறிவியல் கல்லூரி**<br>கோயம்புத்தூர் - 641029. |
| கணினி | : | பிரடாக் பிரிண்ட், கோயம்புத்தூர் - 29. |
| அச்சாக்கம் | : | பிரடாக் பிரிண்ட்,<br>476, பூமாதேவி கோவில் அருகில்<br>கவுண்டர் மில்ஸ் (அஞ்சல்)<br>கோயம்புத்தூர் - 29.<br>அலைபேசி : 9843273994, 7358863327 |
| பக்கங்கள் | : | XXII + 488 = 510 |
| விலை | : | உரூ. 400/- |

**ISBN : 978 - 93 - 80800 - 90 - 5**


# International Conference on Depiction of Religion and Human Society in Tamil Literature


| | | |
|---|---|---|
| Editor's | : | **Dr. K. Murugesan. Dr. M. Chidambaram**<br>**Dr. S. Kumaran. Dr. S. Ramalingam**<br>**Mr. K. Ponnudhurai** |
| Copyright's | : | Editors |
| First Edition | : | November, 2018 |
| Published | : | **Department of Tamil**<br>**Kongunadu Arts and Science College**<br>Coimbatore - 641 029. |
| Computer | : | **Prdag Print**, Coimbatore - 29. |
| Printing at | : | **Prdag Print**<br>476, Near Boomadevi Kovil<br>G.N. Mills (Po), Coimbatore - 29.<br>Cell : 98432 73994, 91505 91017 |
| Pages | : | XXII + 488 = 510 |
| Prize | : | **Rs. 400/-** |

168. **திருமதி. மாலதி பழனியப்பன்** 879
நகர வயிரவன் கோயில் சிற்பங்களும் - ஓவியங்களும்

169. **முனைவர் இரா. மணிமேகலை** 883
சுந்தரரின் பாடல்களில் வாழ்வியல் அகச்சான்றுகள்

170. **முனைவர் மு. ருக்மணி** 889
காசிஆனந்தனின் நறுக்குகளில் சமூகஉணர்வுகள்

171. **முனைவர் ச. அரிச்சந்திரன்** 894
சோளகர் தொட்டி புதினம் காட்டும் பழங்குடிச் சமூகமும் சமயமும்

172. **திரு. மு. சதீஸ்குமார்** 900
உலக அமைதிக்கு மணிமேகலை காட்டிய வழி

173. **மருத்துவர் இரா. செல்வராஜ்** 905
தமிழ் இலக்கியத்தில் ஆநிரைகளும் இடையர் சமூகமும்

# 172. உலக அமைதிக்கு மணிமேகலை காட்டிய வழி

**மு. சதீஸ்குமார்**
*உதவிப்பேராசிரியர், தமிழ்த்துறை (சுயநிதிப்புலம்)*
*கொங்குநாடு கலை அறிவியல் கல்லூரி (தன்னாட்சி)*
*கோயம்புத்தூர் - 641 029.*

## முன்னுரை

மனித சமுதாய மேன்மைக்காகவும், அதன் நலனைப் பேணிக் காக்கவுமே சமயங்கள் தோன்றின. சமூக அறத்தினை நிலைநாட்ட வேண்டி உலக அளவில் பல்வேறு காலகட்டங்களில் பல்வேறு சமயங்கள் தோற்றம் பெற்றுள்ளன. சமுதாயத்தின் அமைதிக்கு எதிரான காரணிகளை அகற்றுவது ஒன்றே சமயங்களைத் தோற்றுவித்த ஞானிகளின் குறிக்கோளாக இருந்துள்ளது. அதன் அடிப்படையிலேயே அவர்கள் தம் சமயக் கொள்கைகளை வகுத்தளித்துள்ளனர். இச்சமயக் கொள்கைகளை மக்களிடத்தே கொண்டுசேர்க்க எண்ணிய சான்றோர் பெருமக்கள் பலரும் இலக்கியத்தை அதற்கான கருவியாகக் கொண்டனர். அதன் அடிப்படையிலேயே பல்வேறு சமயச்சான்றோரும் தத்தம் சமயக்கருத்துகளைத் தமிழ்மொழியில் இலக்கியங்கள் வாயிலாக மக்களுக்குக் கொண்டுசேர்க்க எண்ணிப் பல்வேறு நூல்களை உருவாக்கினர். பௌத்த சமயத்தைத் தோற்றுவித்த சான்றோர் பெருமகனான புத்தரது மெய்ஞானக் கொள்கைகளை மக்களிடம் கொணடு சேர்க்க எண்ணிய சீத்தலைச் சாத்தனார் மணிமேகலைக் காப்பியத்தைப் படைத்தார். உலக அமைதியை நிலைநாட்ட வேண்டி "மணிமேகலை" என்னும் கதைத்தலைவியின் வாழ்வியலை அடிப்படையாகக்கொண்டு உருவவான இக்காப்பியத்தில் முன்வைக்கப்படடுள்ள சமூக அறக்கருத்துகளைப் புலப்படுத்துவதே இக்கட்டுரையின் தலையாய நோக்கமாகும்.

## பிறப்பினால் வரும் துன்பம்

இந்த உலகில் பிறந்தோர் எல்லோரும் ஏதேனும் ஒருவகையில் துன்பத்தின் பிடியில் சிக்கித் தத்தளிக்கவேண்டியுள்ளது. ஏன் இத்துன்பம் நம்மை வந்தடைகின்றது? மணிமேகலை கூறுகின்றது,

> ***"பிறந்தோர் உருவது பெருகிய இன்பம்***
> ***பிறவார் உருவது பெரும் பேரின்பம்***
> ***பற்றின் வருவது முன்னது பின்னது."*** ***(2:64-67)***

என்று. நாம் நமது வாழ்க்கையில் பெறக்கூடிய நிலையற்ற இன்பங்களின் மீது கொண்டுள்ள விடாப்பிடியான பற்றுதலே நம்மைத் துன்பச்